(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 127.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2026 பெப்ரவரி 03, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன,** வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நிசாந்த ஜயவீர,** பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ஹங்சக விஜேமுணி,** சுகாதார பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

கௌரவ சமிந்த லலித் குமார

கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி

கௌரவ லசித் பாஷண கமகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ சட்டத்தரணி அநுராத ஜயரத்ன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து

கௌரவ லால் பிரேமநாத்

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ ரவீந்திர பண்டார

கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா

கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க

கௌரவ தாஹிர் மரிக்கார்

கௌரவ கே.காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மகரூப்

**கௌரவ சானக மாதுகொட**

**கௌரவ ருவன் மாபலகம**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா**

**கௌரவ தனுஷ்க ரங்கனாத்**

**கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ**

**கௌரவ சுரங்க ரத்நாயக்க**

**கௌரவ அசோக சபுமல் ரன்வல**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷன ராஜகருணா**

**கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே**

**கௌரவ எம்.எஸ் அப்துல் வாசித்**

**கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன**

**கௌரவ ருவன் விஜேவீர**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்திகளைச் சபாநாயகர் வாசித்தார்:-

**I**

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/21

2026 சனவரி மாதம் 30 ஆம் திகதி

**கௌரவ ஜ.டப்ளியூ.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதியன்று செய்யப்பட்ட பிரகடனத்தின்மூலம் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பகுதியின் ஏற்பாடுகள் இலங்கை முழுவதும் இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென என்னால் பிரகடனப்படுத்தப்பட்டது.

மேலே சொல்லப்பட்ட பிரகடனத்தை மேற்கொள்ளுவதற்கான காரணம் டிட்வா சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்தத்திற்கு பின்னரான நிலைமை கருதி, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகளைக் கொண்டுநடத்துவதற்காகவென அரசியலமைப்பின் 155 ஆவது உறுப்புரையின் (4) ஆவது துணை உறுப்பின் பிரகாரம் செயற்பட்டு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுகின்றது.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**II**

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2026 சனவரி மாதம் 26 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— “அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல்” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு மனுக்களின் பிரதிகள், எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன் .”

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 36(1) மற்றும் 36(3) ஆம் பிரிவுகள் பிரகாரம் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றினை சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2025.12.01 முதல் 2025.12.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் நிகழ்ச்சித்திட்டத்தினால் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு; மற்றும்

(ii) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2026 சனவரி 28 ஆம் திகதிய 2473/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனம்

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமென கட்டளையாயிற்று.

(3) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான ஆயுள்வேத மருத்துவப் பேரவையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுகாதாரம், வெகுசன ஊடகம் மற்றும் மகளிர் வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2024 ஆம் ஆண்டுக்கான சென்ட்ரெல் இன்ஜினியரிங் சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து, அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்**: (1) டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் சார்பாக அக்குழுவின் உறுப்பினர் கௌரவ எரங்க வீரரத்ன அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 1996ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க மற்றும் 2024ஆம் ஆண்டின் 39ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தம்) சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17(10)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1)ஆம் பிரிவின் கீழ் தொலைத்தொடர்புகள் உட்கட்டமைப்பு வசதிகளை பகிர்ந்து கொள்ளல் தொடர்பாக அப்போதைய தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஒகத்து 07ஆம் திகதிய 2396/32ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான உயர் நீதிமன்றப் பதிவாளர் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(ii) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான செலவுத் தலைப்பு 04 – மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(iii) 2022 ஆம் ஆண்டுக்கான மீயுர்நீதிமன்றக் கட்டடத் தொகுதி முகாமைத்துவச் சபையின் வருடாந்த அறிக்கை;

(iv) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரையும், சாட்சியாளர்களையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் வருடாந்த அறிக்கைகள்;

(v) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(vi) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள்;

(vii) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்;

(viii) 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள்;

(ix) 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கைகள்;

(x) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்;

(xi) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கைதிகள் நலன்புரி நிதியத்தின் செயலாற்றுகை அறிக்கைகள்; மற்றும்

(xii) 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான கடன் இணக்கச் சபைத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் (திருத்தச்) சட்டமூலம்; மற்றும்

(ii) நீதித்துறைச் (திருத்தச்) சட்டமூலம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) கிரிபத்கொட, பெரேரா மாவத்தை, இல. 299/4 இல் வதியும் திரு. எம்.எம்.ஐ.எம். கருணாரத்னவினது 2025.07.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கோணாபினுவல, நிக்ரோத மாவத்தை, இல. 129ஏ எனும் முகவரியில் வதியும் திரு. எஸ். சதுன் காஹிங்கலவினது 2025.07.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க சமர்ப்பித்தார்.

(2) மதுகம, காமினி மாவத்தை, இல. 48/05 இல் வதியும் திரு. நலின் தசந்த விதானவினது 2025.07.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ சமர்ப்பித்தார்.

(3) (i) மகரகம, அம்பகஹபுர, இல. 25 இல் வதியும் திரு. தரிந்து பிரியங்கர வீரசிங்கவினது 2025.11.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கோட்டே, மிரிஹான, புவனேகபா மாவத்தை, சேனாதிலங்காரகம, இல. 5 இல் வதியும் திரு. டப்ளியூ. தசநாயக்கவினது 2025.08.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ தேவானந்த சுரவீர சமர்ப்பித்தார்.

(4) பொரலஸ்கமுவ, வேரஹெர, கங்காராம வீதி, பீரிஸ் மாவத்தை, இல. 39/2 இல் வதியும் திரு. பி.ஏ.எஸ். பொன்னம்பெருமவினது 2025.07.13 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்தன சூரியஆரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2026, பெப்ரவரி 05 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. *சிறப்புரிமை:*** கௌரவ திலிப் வெதஆரச்சி அனுவதிக்க கௌரவ கயந்த கருணாதிலக்க பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ அவர்கள், தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக 2026 ஜனவரி 07 ஆம் திகதி சிறப்புரிமை கேள்விகளின் கீழ் பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்**: பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் சார்பாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மற்றும் 2024 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் (திருத்தம்) சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17(10) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(1) ஆம் பிரிவின் கீழ் தொலைத்தொடர்புகள் உட்கட்டமைப்பு வசதிகளை பகிர்ந்து கொள்ளும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் அப்போதைய தொழில்நுட்ப அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஓகத்து 07 ஆம் திகதிய 2396/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2026.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மு.ப.11.58 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்குவாராக" என தொழில் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 1.11 மணிக்கு கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்குவாராக" என டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.04 மணிக்கு கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.38 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்குவாராக" என தொழில் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.29 மணிக்கு கௌரவ எம்.கே. எம். அஸ்லம் தலைமை தாங்கினார்.)

"கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.57 மணிக்கு கௌரவ சானக மாதுகொட தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (முத்துராஜவெல ஈரநிலத்தைப் பாதுகாத்தல்)**: "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என சுற்றாடல் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.59 மணிக்கு தலைமைத்ததாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2026 பெப்ரவரி 05 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.